**OS. 94/2022**

**நாள். 07.04.2026.**

**பி.வா.சா. 2 – P.T.ராஜா**

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1ம் பிரதிவாதி சரஸ்வதி பெயரில் அவரது கணவர் வேலு சேர்வை கிரையம் வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சரஸ்வதி தாவா 3ம் இலக்க சொத்தை இரண்டு ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கும்போது கிரைய வாங்கிய சொத்தின் மூல ஆவணங்களை சரிபார்த்துதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய 05.01.1983 தேதியிட்ட கிரைய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மூல ஆவணங்களை காண்பித்துத்தான் சொத்தை கிரையமாகவோ, அடமானமாகவோ பெறமுடியும், வாங்க முடியும், பதிவகத்தில் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியும், நானும் சேர்ந்து மோசடியாக 05.01.1983 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றதை மறைத்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி என் மாமனார் என்றால் சரிதான். நான் ரூ.17 இலட்சம் கொடுத்து கிரையம் பெற்றுள்ளேன். அந்த தொகையை 2ம் பிரதிவாதிக்கு பணமாகத்தான் கொடுத்தேன். கிரையப்பத்திரம் எழுதி பதிவு செய்வதற்கு முன்னால் பத்திர அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். கிரையப்பத்திரம் எழுதுவதற்கு முன்பு கிரைய முன்பணமாக ஏதாவது தொகை கொடுத்தேனா என்றால் இல்லை. என் மாமனாருக்கு செலுத்தவேண்டிய அடமான தொகையை நான் செலுத்தினேனா அல்லது 2ம் பிரதிவாதி கவிதா செலுத்தினாரா என்றால் 2ம் பிரதிவாதியே செலுத்தினார். ரூ.20 ஆயிரத்திற்கு மேல் கிரைய தொகை செலுத்தும்பட்சத்தில் காசோலை மூலமாகத்தான் செலுத்தவேண்டும் என்றும், நான் அவ்வாறு காசோலை மூலமாக செலுத்தவில்லை என்றால் சரிதான். நான் வருமானவரி கணக்கு தாக்கல்

செய்கிறேனா என்றால் செய்கிறேன். என்னுடைய வருமான கணக்கில் நான் செலுத்திய தொகை ரூ.17 இலட்சத்தை காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மையில் ரூ.17 இலட்சம் செலுத்தியிருந்தால் அதை வருமானவரி கணக்கில் காண்பித்திருப்பேன் என்றும், செலுத்தவில்லை என்பதால்தான் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் மற்றும் 1, 3ம் பிரதிவாதிகளை மோசடி செய்வதற்காக நான், 2, 4ம் பிரதிவாதிகள் சேர்ந்து மோசடியாக கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் பெற்ற கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தாவா 3ம் இலக்க சொத்தை அடைந்து அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரியல்ல. தாவா 3ம் இலக்க சொத்தில் வாதிகள் மற்றும் 3ம் பிரதிவாதிக்கும் தலா 1/6 பங்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமான தாவா 3ம் இலக்க சொத்தை மேற்படி சொத்துக்கு பாத்தியமில்லாத 2ம் பிரதிவாதியிடமிருந்து என் மாமனார் வாங்கிய அடமானமும், அதன் பின்பு நான் வாங்கிய கிரையமும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

தாவா 3ம் அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி சரஸ்வதி பெயரில் 27.09.1985, 26.11.1986 தேதிகளில் யார் பணத்தைகொண்டு கிரையம் வாங்கப்பட்டது என்று எனக் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சரஸ்வதியின் கணவர் வேலுசேர்வை அவரது பணத்தைக்கொண்டு தன் மனைவி பெயரில் கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. வேலுசேர்வை இறந்த பிறகு தாவா 3ம் இலக்க சொத்தை சரஸ்வதியும், அவரது பிள்ளைகளும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா 3ம் இலக்க சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி சரஸ்வதிக்கு தனிப்பட்ட பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. 18.08.2024ம் தேதியில் 2ம் பிரதிவாதி கவிதா, 1ம் பிரதிவாதி சரஸ்வதியை ஏமாற்றி இனாம்செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வாங்கினார் என்றால் தெரியாது. ஏமாற்றி எழுதி வாங்கப்பட்ட இனாம்செட்டில்மென்ட் ஆவணத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதியான என்

மாமனாருக்கு எழுதிக்கொடுத்த அடமான ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. 18.08.2024 ம் தேதியிட்ட இனாம்செட்டில்மென்ட் ஆவணத்தை செல்லாதுஎன கோரி 1ம் சரஸ்வதி இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண்.123/2022 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியதான், அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் 2ம் பிரதிவாதியிடமிருந்து வழக்கு 3ம் அயிட்ட சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறும்போது 2ம் பிரதிவாதிக்கு கிரைய தொகை எதுவும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. என் மாமனார் கொடுத்த கடன்தொகை மற்றும் வட்டிக்காக நான் 2ம் பிரதிவாதியிடமிருநது கிரைய பத்திரம் எழுதிவாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 3ம் இலக்க சொத்தை நாளதுதேதிவரை வாதிகளும், 3ம் பிரதிவாதியும் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா 3ம் இலக்க சொத்தை பொறுத்தவரை எனக்கு அனுபவமோ, பாத்தியமோ கிடையாது என்றால் சரியல்ல. தாவா 3ம் இலக்க சொத்தில் பிரிவினையாகாத 1/6 பங்கு 3ம் பிரதிவாதிக்கு உள்ளது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.